**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>**

**MCOP No:159/2024** **நாள் 17.04.2026**

சாட்சி சீதா ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு ம.சா.2 ஆக 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் திருமதி.K.சுப்புலட்சுமி, என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீதா | தாலுகா | வத்திராயிருப்பு |
| க–பெ | செல்வராஜ் | தொழில் | |
| கிராமம் | வ.புதுப்பட்டி | வயது | 40 |

**<u>முதல் விசாரணை</u>**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**குறுக்குவிசாரணை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில்**

இந்த வாகன விபத்து சம்மந்தமாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் சம்பவ நாளில் அந்த பேருந்தில் வத்திராயிருப்பு ஊரில் ஏறி வ.புதுப்பட்டி ஊருக்கு சென்று கொண்டிருந்தேன். அந்த பேருந்தில் பயணிகள் உட்கார்ந்து கொண்டும், நின்று கொண்டும் பயணம் செய்தார்கள் என்றால் சரிதான். நான் அந்த பேருந்தில் அன்றைய தினம் நின்று கொண்டு பயணம் செய்தேன். அன்றைய தினம் அந்த பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. அந்த சாலையில் ஒரு பஸ் தான் போக முடியும். அந்த சாலையில் இரண்டு பக்கமும் கண்மாய் கரை உள்ளது. அந்த பேருந்தில் 27 நபர்கள் தான் பயணம் செய்ய முடியும் என்றும் சம்பவ காலத்தில் அதற்கும் கூடுதலாக பயணிகள் பயணம் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். இந்த பேருந்து ஆனது பாலிசி விதிமுறைகளை மீறி 34 பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்றதால் பேருந்தானது கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தில் எனக்கு இடது கை முட்டி பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக வேண்டி நஷ்ட ஈடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். பேருந்தில் பயணம் செய்த 2 பயணிகள் இறந்துபோனார்கள், சில நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. அந்த பேருந்தின் நடத்துனர் கூட்டம் அதிகமாக இருப்பதால் வேறு ஒரு பேருந்தில் பயணம் செய்யும் படி சொல்லி கேட்டுக்கொண்டும்

நாங்கள் யாரும் அதனை கேட்காமல் அந்த பேருந்தில் பயணம் செய்தோம் என்றால் அப்படியில்லை. விபத்தில் இறந்துபோனவர் நான் குடியிருக்கும் வீட்டிற்கு 4 வீடு தள்ளி வசித்தவர். இந்த விபத்தானது பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும் தெய்வாதினமாக ஏற்பட்டது என்று சொன்னால் அப்படியில்லை. இந்த நஷ்ட ஈடு மனுவை பொறுத்தம்ட்டில் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல. இந்த விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 17th day of April 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.